உட்காருவதா? இதுவரையில் நீண்ட நாட்கள் நான் இந்த அவையிலே இருந்திருக்கிறேன். இப்பேர்பட்ட ஒரு கருத்து சொல்லப்பட்டதாக என்னுடைய ஞாபகத்தில் இல்லை. எனவே, நீங்கள் வெறுமனே அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டால் மட்டும் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, அதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

முற்பகல் 10-40

4. அரசினர் தீர்மானம்

உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமருங்கள். இந்த அவைக்கு என்று ஒரு கண்ணியம் இருக்கிறது, ஒரு மரபு இருக்கிறது, நீண்ட பாரம்பரியமும் இருக்கிறது. சந்து முனையிலே பேசக்கூடிய வார்த்தைகளையெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசக்கூடாது என்கிற முறை இருக்கிறது. இந்த முறைகளையெல்லாம் மீறியும், இத்தனைக்கும் பெருந்தன்மையோடு அவருடைய பேச்சுக்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையிலும்கூட, கண்ணியத்தை மறந்து, தரக்குறைவான வார்த்தைகளைப் பேசிய பரிதி இளம்வழுதி அவர்களை இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நான் விலக்கி வைக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையினுடைய கண்ணியத்திற்கு மாறாக, சட்டப் பேரவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உயர் பண்புகளுக்கு மாறாக, அமங்கலமாகப் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களைச் சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைக்க வேண்டும்"

என்னும் தீர்மானத்தைத முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

2001 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நீக்கப்படுகிறார்.

பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் பேசப்பட்ட பேச்சையும், கருத்தையும் உடனடியாக மறுத்து அதை நீக்கியதாக அறிவித்துவிட்டார்கள். அப்போதே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. நான், பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களும் அவைக்கு வர வேண்டும் என்பதற்காக இப்போது பேசவில்லை. நீங்களே ஒரு தீர்ப்பு வழங்கி, அது உங்களுடைய பேச்சாக தவறாகவோ, சரியாகவோ, சொல்லப்பட்டது உண்மையல்ல என்ற அடிப்படையில் நீங்கள் நீக்கியபோதே, சட்டசபையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதாகச் சபாநாயகர் சொன்ன காரணத்தினால் அது அப்போதே முடிந்துவிட்டது. அது ஒரு குற்றம் என்று கருதினால்கூட அந்தக் குற்றம் நீக்கப்பட்டுவிட்டது. அதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கிறாரா, இல்லையா என்பது வேறு. நான் வருத்தம் தெரிவிக்கக்கூடத் தயார். ஏனென்றால் எதையும், எங்கேயும் சொல்லலாம் என்ற கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். சபாநாயகர் அவர்களே சொல்கிறபோது வெளியிலே எங்கேயோ முச்சந்தியிலே பேசுகிற பேச்சு இங்கே சொல்லப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது எதுவாக இருந்தாலும் அதைச் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டுமென்பது நியாயமும் அல்ல, அவசியமும் அல்ல. அது, உணர்ச்சிவசப்பட்டு எதற்காகவோ பதில் சொல்கிறபோது அந்த வார்த்தை சொல்லப்பட்டு, அதைத் தாங்களே நீக்கிவிட்டீர்கள். தாங்களே நீக்கியதற்குப் பின்னர் தாங்களே தண்டனை வழங்குவது அவசியமா என்பதைத் தாங்கள் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால் அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (கூச்சல்-குழப்பம்)

(பேராசிரியர் க. அன்பழகன் அவையிலிருந்து வெளியேறினார்.) (கூச்சல்-குழப்பம்)

1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(இ) நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். பழைய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"நல்லிணக்க நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நல்லிணக்க நாள் உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்."

ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை 11-15 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS